[2016 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் இயங்கி வரும் சார்பு நீதிமன்றம் பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை தொடர்பாக, உயர் நீதிமன்றத்திலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பரிந்துரை வருகின்றபட்சத்தில், அங்கு தேவையான வசதிகள், இடம், சுற்றுச்சூழ்நிலை இருக்கின்றபட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

கால்நடைக் கிளை நிலையம்

***61176—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றம் எதிர்புறம் இருக்கும் கால்நடைக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றம் எதிர்புறத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு ஏற்கெனவே ஒரு கால்நடை மருந்தகமும், உதவி இயக்குநர் அலுவலகமும் ஒரே வளாகத்தில் இயங்கி வருகின்றன என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

முற்பகல் 10—45

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் பணியாற்றிட வாய்ப்பளித்த எனது தொகுதி மக்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சார்பில் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றிடவும், தேர்தல் நேரத்தில் என்னால் வாக்குறுதிகளாகச் சொல்லப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்று சொன்ன வாக்குறுதிகளையும், நிலுவையிலுள்ள பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் கேட்டுக்கொள்கிறேன். எந்தவித மன மாச்சரியங்களுக்கும் இடம் அளிக்காமல் இன்முகத்துடன் பழகிய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்றப் பேரவையின் செயலாளர், பேரவைப் பணியாளர்கள், பேரவைக் காவலர்கள், செய்தியாளர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியான தொழிலாக கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூர் மருந்தகம், பெருமாள்தேவன்பட்டி மருந்தகம்,

தொம்பக்கலம் மருந்தகம், பிள்ளையார்நத்தம் மருந்தகம், மல்லி மருந்தகம், வத்திராயிருப்பு மருந்தகம், கோட்டையூர் மருந்தகம், அரசப்பட்டி மருந்தகம், கீ. புதுப்பட்டி மருந்தகம், சுந்தரபாண்டி மருந்தகம், கூமாபட்டி மருந்தகம் உள்ளிட்ட 13 கால்நடை மருந்தகங்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்கு கிளை நிலையம், நாச்சியார்பட்டி கிளை நிலையம், மகாராஜபுரம் கிளை நிலையம் ஆகிய 3 கிளை நிலையங்களும் உள்ளன. மேற்படி மருந்தகங்கள், கிளை நிலையங்கள் செயல்பட்டாலும் கால்நடைகளுக்கு உயர் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று சொன்னால், இராஜபாளையம் அல்லது விருதுநகர் போன்ற மருத்துவமனைகளுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால் அங்கே சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துதான் அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர முடியும். எனவே, உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்ற அந்த மருந்தகத்தை ஆய்வு செய்து, அங்கே கால்நடை மருத்துவமனை அமைப்பதற்குரிய வசதிகள் இருக்குமென்று சொன்னால், அங்கே வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை அரசு விதிகளுக்குட்பட்டு அதிகமாக இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இந்த மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா

2016 பிப்ரவரி 20]

என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தரம் உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அந்தவகையில், அந்தப் பகுதி அதிகமான கால்நடைகள் உள்ள பகுதி; அதன்மூலம் தரமான பால் கிடைக்கிறது. அதிலிருந்துதான் புகழ்பெற்ற பால்கோவா உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும், மருந்தகங்களில் மருத்துவச் சிகிச்சை அளிக்க முடியாத நோய்களுக்கும், எலும்பு முறிவு மற்றும் மேல்சிகிச்சை மேற்கொள்வதற்கும் இந்தப் பகுதி கால்நடை வளர்ப்போர் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றத் தேவையான இட வசதி உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர தாங்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

கூட்டுறவு நூற்பாலை

***51161—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?